வளன் ஆய்வம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சு.தமிழ்ச்செல்வியின் கீதாரி நாவலில் இனக்குழுப் பதிவுகள்

**முனைவர் ஜா.ஸ்டெல்லாமேரி,** உதவிப்பேராசியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620 002.

**மின்னஞ்சல் முகவரி** - stellamary_ta1@mail.sjctni.edu

## ஆய்வுச்சுருக்கம்

ஆதி மனிதன் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்க்கை நடத்தினான். தொல்சமூக நிலையில் விலங்குகளோடு போட்டிப் போட்டுக் கொண்டு வெற்றி பெறத் துடித்த தனிமனித வாழ்வு மிகப்பெரிய அளவில் இழப்புகளைச் சந்தித்தது. அந்த இழப்பை ஈடுசெய்ய விரும்பிய ஆதி மனிதன் தங்களை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக் குழுவாகக் கூடி வாழத் தலைப்பட்டான். இக்கூட்டமைப்பு வாழ்க்கை முறையினையே மானிடவியலாளர் இனக்குழு சமூக அமைப்பு என்கின்றனர். இச்சமூகம் தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள இனக்குழுவாக புலம்பெயர்ந்து செல்கின்றனர். புலம்பெயர்ந்து செல்லும் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை நிலையைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாக சு.தமிழ்ச்செல்வியின் கீதாரி படைப்பு அமைந்துள்ளது. நிலமானிய சமுதாயச் சிதைவின் விளைவாக உருவாகிய வாழ்க்கைத் தத்தவத்தை வெளிப்படுத்தும் அனுபவங்கள் புதினமாக வெளிப்படுகின்றன. மனித வாழ்வின் அனுபவங்களை அடுத்த சந்ததிக்குக் கொண்டு செல்லும் ஊடகமாக நாவல் இலக்கியம் திகழ்கிறது. புலம்பெயர்ந்து செல்லும் மக்களிடம் ஏற்பட்ட பழக்கத்தை அனுபவமாக புனைவியல் நோக்கில் இந்த நாவல் படைக்கப்பட்டுள்ளது. இடையர் இனக்குழு சமூகத்தின் பதிவுகளை மக்களின் சிந்தனையில் நிலைநிறுத்தும் பாங்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

ஆதி சமுதாய அமைப்பாக உலகமெங்கும் இனக்குழுக்கள் நிலவின. இனக்குழு மக்கள் அனைவரும் இணைந்து கூட்டு வாழ்க்கை நடத்தினர். இந்த

இனக்குழுக்கள் பல்வேறு குடி, திணை அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தனர். வேட்டை வாழ்க்கை, புராதான விவசாயம் ஆகியப் பொருளாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூட்டு வாழ்க்கை வாழ்ந்தனர். பண்டைய இலக்கியங்கள் இனக்குழுக்களின் பல்வேறு பண்புகளை மிக நுட்பமாகவும், உண்மைத் தன்மையோடும் வெளிப்படுத்துகின்றன. சமுதாயத்தில் தான் பெற்ற அனுபவத்தையும், தான் சார்ந்த குழுவிற்குத் தீங்கு வராமலும், தன் சமூகத்தின் கட்டமைப்பு சீர்கெடாமலும் காப்பதே இனக்குழுத் தலைவனின் முதன்மையான பணியாக இருந்தது. தனிமனித நிலையில் தன் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத மனிதஇனம் குழுவாகச் செயல்பட்டது. இக்குழுவில் அனைவரும் சமமாகவே கருதப்பட்டனர். அதனால் தங்களின் சமூகத் தளத்தில் வலிமை, அறிவு முதிர்ச்சி என்னும் வகைகளில் உயர் நிலையில் இருந்த ஒருவனையே இனக்குழுத் தலைவனாகக் கருதினர். இடையர் சமூகப் பிரிவின் ஓர் இனக் குழுவைக் கதையாடலாகக் கொண்ட இந்நாவல் சாதாரண சம்பவ விவரிப்புகளின் ஊடாக இனத்திற்குரிய அடையாளங்களான இருப்பிடம், தொழில்முறை, பழமொழி கதை, பாடல் போன்ற வழக்காறுகள், அவர்களுக்குரிய நம்பிக்கை, சடங்கு, தெய்வம், வாழ்க்கை முறைமைகளான திருமணமுறை, பழக்க வழக்கங்கள், உணவு முறைமை குறித்த பதிவுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.

**இனக்குழு - விளக்கம்**

நாட்டார் வழக்காறுகளை அவை வழங்கும் இயற்கைச் சூழலில் தொகுத்து, சமூகக்குழு அடிப்படையில் ஆராய்ந்து, அச்சமூகக்குழு பற்றிய முழுமையான அடிப்படைத் தன்மைகளை ஆய்வு செய்து வெளிப்படுத்துவது இனக்குழுவியல் அல்லது இனவரைவியல் ஆகும். "ஒரு தனித்த சமுதாயத்தின் பண்பாட்டைப் பற்றி மானிடவியலாளர்கள் அச்சமூகத்தோடு நீண்ட காலம் ஒன்றி வாழ்ந்து, ஆய்வு செய்து அதனை எழுத்தில் எழுதி அளிக்கும் தனி வரைவு நூலே இனவரைவியல் எனப்படும்" இத்தகு நீண்ட கால களப்பணியில் உற்றுநோக்கி விவரிக்கும் தனிவரைவுகளை எழுதும் மானிடவியலாளர்கள் இனவரைவியலாளர் எனப்படுவர்.

**சங்க இலக்கியம் சுட்டும் இனக்குழுக்கள்**

சங்க காலத்தில் கொல்லர், குயவர், தச்சர், துணி வெளுக்கும் புலைத்தி, பருத்திப் பெண்டிர், நெசவாளர், பரதவர், உமணர், குறவர், எயினர், ஆயர், உழவர், பாணர், பொருநர், கூத்தர், வேடர், இணவர், கோடியர், உயிரியர், துடியர், கானவர், கடம்பர், பறையர், வணிகர்கள், வேளாளர்கள், வடுகர், புலையர் முதலானோர் இனக்குழுக்களாக வாழ்ந்தனர்.

**இருப்பிடம்**

இடையர்கள் நிலையாக ஓர் இடத்தில் வாழாது புலம் பெயர்ந்து அலைந்து திரிந்து வாழ்ந்துள்ளனர். சங்க காலத்திலேயே மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்துள்ளதை இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

“ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்

ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்

புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்” (நெடு.5)

தற்காலத்திற்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்ட இடையர் சமூக ஒரு பிரிவினரின் வாழ்வியலை இயல்பாகப் பதிவுசெய்யும் இந்நாவல் அவர்களுக்கென நிலையான இருப்பிடம் எதையும் பதிவு செய்யவில்லை ஷமேமங்கலம்’ என்ற ஊர் சொந்த ஊராக இருந்தாலும் தொழில்முறை சார்ந்து புலம்பெயர் வாழ்க்கையே மேற்கொள்கின்றனர். மாவட்டங்கள் விட்டு மாவட்டங்களுக்கும் மாவட்டத்திலே ஊர்விட்டு ஊர்களுக்கும் சென்று நிலையான இருப்பிடம் இல்லாமல் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். “கடலுக்கும் ஒடவுக்கும் இடையில் நீண்ட மேட்டு நிலமாக இருக்கும் மன்னாரத்தில் தான் ஆடுகளை மேய்த்துகொண்டு இவர்கள் தங்கியிருக்கிறார்கள். ஊர்களின் வயல்காடுகளிலும் கோட்டங்களிலும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் இவர்கள் மழைக்காலத்துக்கு மட்டும் மன்னாரத்திற்கு வந்துவிடுகிறார்கள். ஆடி மாதத்தில் ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டாலே ஆடு மேய்க்கும் கீதாரிகளுக்கு ஊர்களில் ஆடு மேய்க்க முடியாமல் போய் விடும். வழக்கமாய் ஆடுகள் மேயும் வயல்காடு கோட்டகமெங்கும் நடவு நட்டுவிடுவார்கள். ஆடுகளை மேய்க்கவும் பட்டி போடவும் இடமில்லாமல் போய்விடும்” (பக்.30) ஊர் ஊராய் ஆட்டோடு திரிந்து பிழைப்பு நடத்தும் கீதாரி கூட்டத்தினர்” (பக்.40) இந்நாவலின் நிலையாக ஒரே இடத்தில் வீடுகட்டி தங்களின் வாழ்க்கையை வாழாது உறவுகளுக்காக, சூழ்நிலைக்காக, தொழிலுக்காக புலம்பெயர்ந்துச் சென்றுள்ளதை அறியமுடிகிறது.

**நம்பிக்கை**

மக்கள் தங்கின் வாழ்க்கையில் நம்பிக்கையை பின்பற்றி வருவது வழக்கம். ஒவ்வொரு சமூகம் சாந்து நம்பிக்கைகள் அமைகின்றன. இடையர்கள் ஏன் மழையிலும் தண்ணீரிலும் கிடந்து வருத்தப்படுகிறார்கள் என்பது இந்நாவலின்

வழியாக அறிய முடிகின்றது. அவர்களின் கதையை கதை தலைவி வாயிலாகி கதை தலைவன் அறிந்து கொள்கிறான். “மழைபெய்து வெள்ளம் வர ஆரம்பிக்கும்போது ஓர் ஆட்டுக்காரன் மட்டும் தனியாக காட்டிற்குள் தங்கியிருந்தான். ஆட்டிற்குத் தண்ணீரிலேயே கிடையைப் போட்டு வேலியில் படர்ந்து இருந்த பிரண்டை கொடிகளை எடுத்து மெத்தையாக விரித்துக் கொண்டான். தென்னைக் கீற்றால் பின்னிய கீற்றை மேலே வைத்துச் சுகமாகத் தூங்கியிருக்கிறான். அவ்வாறு தூங்கும்போது என்ன சுகமாக இருக்கிறது. தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டான். இந்த சுகமானது ஆண்டவனுக்குக் கூட கிடைத்திருக்காது என்று எண்ணும்போது பார்வதியும் பரமசிவமும் படி அளப்பதற்காக வரும்போது அவன் கூறியதை கேட்ட இவர்கள் நம்மைவிட நன்றாக இருக்கும் ஒருவனுக்கு நம்மால் என்னசெய்ய முடியும் என்று எண்ணி அவனை பார்க்காமல் நீ இப்படியே இரு என்று வரம் கொடுத்தார்களாம். அதனால் தான் ஆடு மேய்ப்பவர்கள் இன்னும் மழையிலும் தண்ணீரிலும் இருந்து வேதனைப்படுகிறார்கள். ஆடு மேய்ப்பவர்களின் கதையானது பழைய மரபுபோல் பின்பற்றப்படுகிறது” (பக்.104) எலேய் மொச செதறி ஓடுதுடோய். ‘மொசச் சவுனம் பொல்லாச் சவுனமுடோய்’ (ப-127) ஆட்டுக்காரர்கள் ஆடு மேய்ந்து கொண்டிருக்கும்பொழுது வேட்டையில் ஈடுபடுதல் தவறு என்றும் ஆபத்தாக அமையும் என்பது இவர்கள் முன்னோர்களின் கருத்து இன்றளவும் இச் செய்தி அவர்களின் நம்பிக்கையாகவும் உள்ளது.

**வாழ்க்கை நிலை**

ஊர்விட்டு ஊர்வந்து நாடோடிகள் போலப் பிழைப்பு நடத்தும் ஆடு மேய்ப்பவர்களின் நிலையானது ஊமைகளாகவெ எங்கும் இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கையில் அடிமைத்தனம் என்பது நிலைத்து நிற்கின்றது. கீதாரிதங்களின் வலசைக்கு அருகில் கிடந்த பெண்ணுக்கு இரக்கப்பட்டு குழந்தை பிறக்குவதற்கு உதவிசெய்தார். இதைப்பற்றி அருகில் உள்ள ஊர் பெரியவர்களிடம் சொல்லி தங்களின் வாழ்க்கை நிலையை பதிவுசெய்கிறார். “இருக்கப்பட்டவகல்லாம் யோசிக்கிறிக. நாங்க அலஞ்சி திரிஞ்சி கா வயத்து கஞ்சி குடிக்கிறவ. இதுகள காப்பாத்துன தெண்டத்துக்கு நாங்களே வளக்குறதுதான் ஞாயமுண்டு நெனச்சீகன்னா போட்டுட்டுப்போங்க” (பக்.25) என்று அப்பாவித்தனமாக கூறுதல். தங்கள் மீதும் தங்கள் இனத்தின் மீதும் ஒருவர் கூறியது கோபம், அவமானம் என்பதையெல்லாம் இவர்கள் ஒருபோதும் நினைப்பதேயில்லை. கூலியைக் கூப்பிட்டு இவர்களை எவ்வளவுதான் அடித்து உதைத்தாலும் ஏனென்று கேட்கமாட்டார்கள். எவ்வளவு கீழ்த்தரமாக திட்டினாலும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு வாய்திறக்காமல் போகும் இயல்புடையவர்களாகவும் இவர்களின் இந்தப் பரிதாபமான நிலையைக்

கண்டு இரக்கப்பட்டு யாராவது இவர்களிடம் விசாரித்தால் அதற்கு இவர்கள் சொல்லும் பதில் இன்னும் பரிதாபமாக இருக்கும். "யாரும் எங்கள சும்மா அடிக்க மாட்டாக போன வருசம் மொத வருசத்துல அவுக கொல்ல பயிறு பச்சியில எங்க ஆடுக மேஞ்சிருக்கும். அந்த கோவத்துல அடிக்கிறாக. அவுக அடிக்கிறது ஞாயந்தானே? நம்மமேல தப்புருக்கு, பட்டுக்கிட்டுத்தானே போவனும்" (கீ.ப.111) என்று மிக இயல்பாக சொல்லுவார்கள் என்பது போன்ற கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**சடங்குகள்:-**

இடையர்களுக்க திருவிழாக்கள், கலைநிகழ்ச்சிகள், பொழுது போக்கு விடையாட்டுகள் இவற்றில் இவர்களுக்கு ஈடுபாடு கிடையாது. ஒவ்வொரு இடையர்களும் பொங்கல் விழாவை மட்டும் மகிழ்ச்சியாக சிறப்பித்துள்ளனர். பொங்கலன்று ஆடுகளைப் பெட்டை, கிடா என்று தனித்தனியாக அலங்கரித்து பின் தளுவை போடும் இடத்தில் தெப்பம் கட்டி ஆட்டுக்குட்டியின் காதை அறுத்துச் சடங்கு செய்வது (ப-114) போன்ற சடங்கு முறைமைகளும் கதையோட்டத்தின் ஊடே நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த நம்பிக்கைகள் சடங்குகள் இனத்திற்கேயுரிய, இயற்கையோடு இயைந்த தன்மைக் கொண்டனவாக உள்ளன.

**திருமணச் சடங்கு:**

திருமண முறையைப் பார்க்கும்போது திருமணம் செய்துகொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்களின் சம்மதத்தை இங்கு பதியப்படவில்லை. "சித்தப்பா முறையில் திருமணம் செய்துகொள்ளுதல் புதுசில்ல நம்மளுக்கு" (ப-98), அண்ணன் இறந்தால் அவன் மனைவியைத் தம்பி திருமணம் செய்துகொள்ளும் முறையும் (ப-134) திருமணச் சடங்கில் மாப்பிள்ளைக்குப் பதிலாக அவன் ஆடு மேய்த்த தடிக்கம்பை வைத்து திருமணம் செய்யும் போக்கையும் (ப-101) திருமணத்திற்குச் சீதனமாக ஆடுகளும் (ப-52) பாத்திரப் பண்டங்களுடன் மளிகை சாமான்களையும் சீதனமாய்க் கொடுப்பதும் ஆட்டுக்கார இடையர்களின் வழக்கமாயிருந்தன என்பதை இந்நாவல் விளக்குகிறது. இது தொழிலையும் வாழ்க்கையையும் ஒன்றாக இணைக்கும் தன்மையைக் காட்டுகிறது.

**இறை நம்பிக்கை:-**

இடையர்கள் வணங்கும் தெய்வங்களாக நல்லாமுனி, நெறஞ்சாயி, மகமாயி, மாரியம்மன் மற்றும் திருச்செந்தூர் முருகன் போன்ற தெய்வங்கள் ஆகும். "தனியே இருளாயி மட்டும் பிரசவம் பார்க்க வேண்டிய தாகிவிட்டது. திருச்சொந்தூர் முருகா,

நெறஞ்சம்மா இந்தப் பொண்ணப் போட்டு வதைக்காம சீக்கிரமா வயத்த வுட்டு நீங்கணும்'' என்று வேண்டிக்கொண்டாள். (பக்.18) தங்களின் வாழ்க்கையில் அதிகமாக துணைநிற்பது நெறஞ்சாயிதான் என்பதும் ஒருசில இடங்களில் முருகனையும் நம்பியுள்ளதை நாவல் வழி அறியமுடிகிறது.

**தொழில்:-**

இடையர் சமூகத்தை அடையாளப்படுத்தும் இந்நாவல் அச்சமூகத்தின் தொழில்முறை குறித்த நாட்டார் வழக்காற்றுக் கதையாடல் ஒன்றை முன்வைக்கிறது. இக்கதையில் இடையர்கள் ஆடுமேய்த்து நாடோடிகளாகப் பிழைப்பதற்கான வழக்காற்றுக் கதையாடல் கூறப்படுகிறது. தொழில்களாக ஆடு மேய்த்தல், இடை கட்டுதல் போன்றவை கூறப்பட்டுள்ளன. தொழில் முறையில் ஆண், பெண் வேறுபாடில்லை. ஆடு இல்லாத இடையர்கள் ஆடு வைத்திருப்பவர்களிடம் வாடகைக்கு ''ஓராண்டிற்குப் பிறகு ஓர் ஆட்டிற்கு இரண்டு ஆடாகத் திருப்பித் தருவதாகக் கூறி வாங்கி அதன் புழுக்கைகளை விற்று பிழைப்பை நடத்துகின்றனர். இவற்றைத் தவிர வேறு தொழில் செய்வதில்லை. கேட்டாலும் தெரியாது என்பது மாதிரியான விடைகள்தாம் வரும்'' (பக்.165) இவர்கள் தொழில் ரீதியாக நிலவுடைமைச் சமூகத்தினரை அண்டி ஆதரவுச் சமூகமாகத் தங்களுடைய வாழ்வை முன்நகர்த்தக் கூடியவர்களாக உள்ளனர்.

**தொழில் நம்பிக்கை**

கீதாரி ஒருகாலத்தில் தன் இனத்திற்கே முன்னோடியாக தொழில் நடத்திவந்துள்ளார். குடும்ப சூழ்நிலையின் காரணமாக வறுமையில் வாடும்போது அதிகமாக ஆடுகள் வைத்திருக்கும் ஆட்டுக்காரர்களை சந்தித்து தன் நிலையை கூறினார். ஆட்டுக்காரர்கள் கீதாரி மீது கொண்ட நம்பிக்கை, மரியாதையின் காரணமாக கேட்ட ஆட்டை ஓட்டிக் கொடுக்கச் செய்தது. ''பத்தாடு பத்திக்கிட்டுப் போறன். நோய் நொடியின்னு ஆட்டுக்கு எதுவும் சேதமில்லாமல் அடுத்த வருசம் இருவது ஆடா ஒங்கக்கிட்ட வுட்டுருவன்'' (பக்.168) என்று நம்பிக்கையோடு வாக்களித்துவிட்டே ஒவ்வொருவரிடமிருந்தும் ஆடுகளை பத்திக்கொண்டு போனார். கீதாரிக்கு வயதானாலும் தன் தொழில் மீது கொண்ட நம்பிக்கையே அவரை ஆடுகளை மேய்க்கத்தூண்டியதாக இந்நாவல் பதிவுசெய்துள்ளது.

**பழமொழிகள்**

நிலையற்ற வாழ்க்கை நடத்தும் கீதாரிகள் நிலையாக ஒரே இடத்தில் ஒருமாதம் தங்கபோகும் சூழ்நிலையை புரிந்துகொண்டு தங்களுக்கு கிடைத்த

நெல்லை அரைத்து அரிசியாக சேமித்து வைத்தார். சீர்காழியை விட்டு சிதம்பரத்தை நோக்கி செல்ல திட்டமிட்டவர்கள். தங்களின் கையில் மூட்டையாக இருக்கும் அரிசியை பார்த்தால் "கையிக்கெட்டுன அரிசி வாயிக்கெட்டாம பெயிரக்கொடாது" (பக்.139) அரிசி கடத்துபவர்கள் என்று கையும் களவுமாக பிடித்துவிடுவார்கள் என்று கவலைப்பட்டார்கள். அண்ணன் இறந்தவுடன் அவன் மனைவியை தம்பிக்கு திருமணம் செய்துகொடுப்பது இவர்களின் வழக்கம். தம்பி தன் அண்ணன் மனைவியை திருமணம் செய்துகொள்ளமாட்டேன் என்று கூறும் போது 'பரியாரி குப்பய நோண்டுனா வெறும் மசுராத்தேன் வரும். அவன் வேறென்ன சொல்லுவான்னு நெனக்கிற அவன என்னக்கிட்ட வுடு. ஒத்துக்கிறானா இல்லாண்டு நான் பாக்குறன்' "கெஞ்சுனா மிஞ்சுவானுக மிஞ்சுனா கெஞ்சுவானுக"(பக்.132) நாவல் முழுக்கத் தங்கள் சாதியம் குறித்த பழமொழிகள், வாழ்க்கை குறித்த பழமொழிகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**பாடல்**

இனக்குழுக்கள் குழுவாக தங்களின் வாழ்க்கையை நடத்தும் போது தொழில் சார்ந்த பாடல்களையே பாடியுள்ளனர். இடையர்கள் கிடைகட்டும் பொழுது தூக்கம் வராமல் இருக்கப் பாடல்கள் பாடியுள்ளனர். தங்களை தாங்களே மகிழ்ச்சியடையச் செய்யும் பாட்டு, எதிர்பாட்டு, தெம்மாங்குப் பாட்டு என்ற அடிப்படையில் பாடல்கள் அமைந்துள்ளன.

"சந்திரரே சூரியரே
சாதிப் பகவானே
இந்திரர நோக்கியல்லோ
எடுத்தனதே சிறுதெம்மாங்கே...."

ஊரைவிட்டு ஒதுங்கியிருந்த வயல்வெளியிலிருந்து ஒலித்ததுபாட்டு. இதை கேட்ட கீதாரி உற்சாகமாக

"பாட்டுக்கும் பாட்டெடுப்பேன் - ஓம்
பாட்டனயும் தோக்கடிப்பேன்
எதிர்பாட்டு படிக்கலேன்னா
ஏணிவச்சி பல்லொடொப்பேன்"

(பக்.118)

இவற்றை அவர்களுடைய கலையாகவோ பொழுதுபோக்காகவோ கொள்ள முடியாது. ஆடு மேய்க்கும் போது மிக இயல்பாக தங்களின் மனக்கருத்துக்களை வெளிப்படுத்துவாக தெம்மாங்கு பாடல்கள் அமைகின்றது.

**உணவு முறை**

ஊர் ஊராக அலைந்த திரிந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் தினமும் இரண்டு வேலை சோறுதான். “இரவு சுடுசோறு உப்புக் கண்டம் போட்டு வைத்த குழம்பு, காலையில் பழையசோறு அல்லது தெளிவு தண்ணீர் மட்டும் தான் பின்பற்றி வருகின்றனர். மழைகாலம், வெயில் காலம், பனிகாலம் என்ற அனைத்து பருவங்களிலும் இது தான் இவர்களின் உணவுமுறையாக இருந்துவருகிறது”.(பக்.13) ஆடுகள் இறந்து விட்டால் ஆட்டு இறச்சியை பாறைகளில் உப்பு சேர்த்து காயவைத்துக்கொள்வது இவர்களின் வழக்கமாக உள்ளது.(பக்.155). உணவுமுறையைப் பார்க்கும் பொழுது நெல்லரிசி சோறு, குழம்பு, புலம்பெயர் இடத்தில் கிடைக்கக்கூடிய தானிய வகைகள் போன்றவையும் கறி வற்றலுக்கு மிளகாய் சாந்து அரைத்து வைத்துக் கொள்வதுமான உணவுமுறைகள் கூறப்படுகின்றன. தாங்கள் தங்கியிருக்கும் வலைசைக்கு அருகில் கத்திரிக்காய் மிளகாய், கீரை போன்ற விதைகளை எடுத்துச் சென்று பயிர்செய்து உணவுக்கு பயன்படுத்தியுள்ளனர்.

**கல்வி**

நிலையற்று வாழும் இந்த இனக்குழுக்கள் படிப்பறிவற்றவர்களாகவே வாழ்ந்துள்ளனர். இந்நாவலில் தான் வளர்த்த குழந்தைக்கு கல்வி வாய்ப்பு கிடைப்பதை உணர்ந்த கீதாரி “நீ பள்ளிக்கொடம் போயி எழுத்தெல்லாம் படிச்சிட்டு பெரிய வாத்தியாரம்மாவா வரணும். படிக்காத முட்டாக் களுதையொளாக் கெடக்குற எங்களுக்கு எழுத்துக் கத்துக்குடுக்கணும்” (பக்.55) கல்வியின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் பதிவுசெய்வதாக அமைகிறது. ஊர் ஊராக அலைந்து திரியும் ஆட்டுக்காரரர்கள் தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப தங்களின் குழந்தைகளை விடுதியில் தங்கவைத்து படிக்கவைப்பதையும்(பக்.154) இந்நாவல் வெளிப்படுத்துகிறது.

**இறப்புச் சடங்குகள்**

ஆடுமேய்த்துக் கொண்டிருக்கும் போது எந்த ஊரில் யார் செத்தாலும் உடலை சொந்த ஊருக்குக் கொண்டு வந்து போட்டுதான் அடக்கம் செய்துள்ளனர். “நாடோடியாக அலயிரம் சொந்த மண்ணுல ஒக்காந்து ஒருவேள சோறு திங்கிறதில்ல. சாவக்குள்ளயாவது ஒடம்ப ஊருகொண்ட சேத்துடணும் என்பது

ஆட்டுக்காரரர்களின் விருப்பமாக இருந்தது”(பக்.129) வழி வழியாக இந்நெறியை இந்த சமூகம் பின்பற்றி வந்துள்ளதை இந்நாவலில் உள்ள பதிவுகள் விளக்குகிறது.

**முடிவுரை**

இடையர் சமூகத்தினருள் ஒரு குழுவை மட்டும் அடையாளப்படுத்தும் இந்நாவல், அவர்களின் சமூக உறவுகள், மதிப்பீடுகள் பண்பாட்டு அசைவியக்கங்கள் சதா தங்கள் வாழ்வைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கும் தொழில் முறைமைகள், நம்பிக்கை, சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை கீழைத் தஞ்சை வட்டார மொழி நடையில் சாதாரணச் சம்பவ விவரிப்புகளின் ஊடாக வலி, துயரம், மரணம் இவற்றின் பின்னணியில் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. விளிம்புநிலை மக்களை மையமிட்டதாக அமைந்துள்ள இந்நாவல் படைப்பாளரின் ஆளுமைதிறனை வெளிப்படுத்துகிறது. இனக்குழு குறித்த பதிவுகள் இச்சமுதாயத்தை சிந்திக்கவைக்கும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. பக்தவத்சல பாரதி. 2003. பண்பாட்டு மானிடவியல். சிதம்பரம். மெய்யப்பன் பதிப்பகம்.
2. இளங்குமரனார்.இரா, தமிழகன்.பி. 2008. செவ்விலக்கியக் கருவூலம்-1. சென்னை. தழிழ்மண் அறக்கட்டளை.
3. தே.லூர்து. 1997. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள். பாளையங்கோட்டை. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
4. தமிழ்ச்செல்வி.சு. 2003. கீதாரி. மருதா. சென்னை.